ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/27 - 2020 සැප්තැම්බර් මස 16 වැනි බදාදා - 2020.09.16

*2193/27 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம் (175 ஆம் அத்தியாயம்)**

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சங்கபால விகாரையின் எசல பெரஹரா உற்சவம் - 2020

(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2019.12.12 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2153/15 இன் யாத்திரை விதிமுறைகள் தொடர்பாக பொது மக்களின் கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்விதிமுறைகள் தொடர்பில் கீழ்க் காணப்படும் விடயங்கள் அறிவிக்கப்படுகின்றன :

1. **பெரஹரா நடாத்தப்படும் கால எல்லை :**

- 2020.09.18 ஆந் திகதி சுப வேளையில் கப் நடும் உற்சவம் நடைபெறும்.
- 2020.09.26 ஆந் திகதி இரவுகால பிரித் வைபவம் மற்றும் மறுநாள் தானம் வழங்குதல் இடம்பெறும்.
- 2020.09.27 ஆந் திகதி குபுல் பெரஹரா.
- 2020.09.28 ஆந் திகதி சலு பெரஹரா.
- 2020.09.30 ஆந் திகதி ரந்தோலி பெரஹரா.
- 2020.10.01 ஆந் திகதி மஹா பெரஹரா.
- 2020.10.02 ஆந் திகதி நீர்வெட்டு மற்றும் கம்மடு சாந்திகர்மய.
- 2020.10.03 ஆந் திகதி அதிகாலை கடவுள் பிரசாதம் படைத்தலுடன் எசல பெரஹரா உற்சவம் நிறைவுபெறும்.

1A - G 32902 — 20 (2020/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2. முகாம் பகுதி :**

- வடக்கில் சங்கபால மலையையும், தெற்கில் இறக்குவானை ஆற்றையும், கிழக்கில் பெரஹரா மாவத்தையையும், மேற்கில் பெரஹரா மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்ட பூமிப் பிரதேசத்திலேயே எசல பெரஹரா நடாத்தப்படுகின்றது.

**3. வாகனம் :**

3.1 என்னால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் பெறப்பட்ட அனுமதியின்றி மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள் அல்லது வண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட வளாகத்திற்குப் புறம்பாக வேறு இடங்களிலோ அல்லது விழா நடைபெறும் பிரதேசங்களில் நிறுத்தி வைக்கப்படுவதோ, உட்பிரவேசிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

3.2 இரத்தினபுரி-எம்பிலிபிட்டிய பிரதான வீதியில் காணப்படும் விகாரையின் நுழைவாயிலினூடாக வாகனங்கள் விகாரைக்குள் உட்பிரவேசிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

**4. கட்டிட நிர்மாணம் :**

4.1 என்னால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் பெறப்பட்ட எழுத்து மூல அனுமதியின்றி 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மடுவமோ, தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டிடமோ அல்லது தற்பொழுது காணப்படும் கட்டிடத்தில் புதிய பகுதியினை உட்சேர்ப்பதோ தடை செய்யப்படுகின்றது.

4.2 என்னால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கட்டளைகளில் ஏதாவது ஒன்றை நிறைவேற்றுவதற்காக முகாம் பிரதேசத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் அல்லது இடத்திற்கு உள்நுழைதல் மற்றும் விளம்பர அறிவித்தல் அல்லது பலகைகள் காட்சிப்படுத்தல் தொடர்பில் முகாம் பிரதேசத்தில் தூண்களை அமைத்தல் அல்லது கட்டுமாணம் அல்லது கட்டிட நிர்மாணம் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுகின்றது.

**5. சுகாதாரம் :**

5.1 தொற்றுநோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் எவரேனும் முகாம் பிரதேசத்திற்கு உட்பிரவேசிக்கக் கூடாது. நாட்டில் தற்பொழுது காணப்படும் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் கட்டாயமானதாகும்.

5.2 பக்தர்களை அனுமதித்தல் மஹா பெரஹரா நடைபெறும் தினத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதோடு சுகாதார விதிமுறைகளுக்கமைய பக்தர்களை பங்குகொள்ளச் செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

5.3 பெரஹரா நடைபெறும் ஏனைய தினங்களில் பக்தர்கள் பங்குபற்றுதலின்றி சம்பிரதாயங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டு செயற்பட வேண்டும்.

5.4 நடனக் குழுக்களின் பங்குபற்றல் வரையறுக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் தொடர்பான விபரங்களைத் தன்னகப்படுத்தல், விழா ஆரம்பிப்பதற்கு முன்னர் பரிசோதனைக்குட்படுத்தல், தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தலின்போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றல் அவசியமாகும்.

5.5 பெரஹரா உற்சவத்தில் பங்குபெறும் அடியார்களுக்கு வழங்கப்படும் உணவு சுகாதாரப் பரிசோதகரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

5.6 பெரஹரா உற்சவத்திற்கு முன் மற்றும் பெரஹரா நடைபெறும் காலப்பகுதியில் சுகாதார சேவைகளை வழங்கும் சுகாதார மருத்துவ அதிகாரி சேவை அலுவலகங்கள்-மாவட்ட வைத்தியசாலை-உடவலவ, ஆதார வைத்தியசாலை-எம்பிலிப்பிட்டிய மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

*6*. **வியாபாரம்** :

*6.1* என்னால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி எந்த ஒரு நபரும் விழா நடைபெறும் பிரதேசத்தில் சீட்டுக்கள், கொடி விற்பனை செய்தல் அல்லது வேறு ஏதாவது தேவைக்காக பங்களிப்புக்கள் சேகரித்தல் போன்றன தவிர்க்கப்படுவதோடு, பெரஹரா நடைபெறும் காலப்பகுதியில் புனித பூமியிலோ அல்லது சுற்றுப்புறத்திலோ புகையிலைப் பொருட்கள் மற்றும் அனைத்துப் போதைப் பொருட்களின் விற்பனை மற்றும் பாவனை பூரணமாக தடை விதிக்கப்படுகின்றது.

*6.2* மலர்கள் மற்றும் பூசைப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் பெரஹரா நடைபெறும் நாட்களில் பி. ப. 5.00 மணி முதல் பெரஹரா முடிவடையும் நேரம் வரை மூடப்படல் வேண்டும்.

*7*. **இரவலர்** :

- புனித பூமிக்கு வெளியே நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் தவிர முகாம் பிரதேசத்தில் பிச்சை எடுத்தல், தானம் கேட்டல் அல்லது எவரேனும் தானம் கொடுத்தல் அல்லது பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

*8*. **மின்சாரம் வழங்கல்** :

- விகாரை வளாகத்திற்கு மற்றும் பெரஹரா நடாத்தப்படும் வீதியில் மின்சார விளக்குகள் மற்றும் வீதி விளக்குகளைப் பொருத்துதல், இலங்கை மின்சார சபை மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றது.

*9*. **நீர்** :

- பக்தர்களுக்கு அவசியமான குடிநீர் வழங்கல் மற்றும் மேலதிக குடிநீர் பவுசர்களை வழங்குதல் உடவலவ தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குப் பொறுப்பளிக்கப்படுகின்றது.

*10*. **பாதுகாப்பு** :

- அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பக்தர்களுக்கு இடையூறின்றி சாலையில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல் ஆகியவை பாதுகாப்புப் படையினருக்கும் மற்றும் காவல் துறைக்கும் கையளிக்கப்படுகின்றது.

*11*. **இடவசதி** :

- நடனக் குழுவின் தங்குமிட வசதிகளுக்காக கொழும்பகே ஆர மகா வித்தியாலயம், சங்கபால குணரத்ன மகா வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு சுகாதார அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலானது வலயக் கல்வி அலுவலகம் மற்றும் குறிப்பிட்ட பாடசாலையின் அதிபர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது.

மாலனி லொகுபோதாகம,
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி நிர்வாக மாவட்டம்,
முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி.

மாவட்டச் செயலகம்,
இரத்தினபுரி,
2020, செத்தெம்பர் 15.

10-60

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.